தாய்மாமன் தங்கமோதிரத் திட்டம்: வெற்று விளம்பரமா, மக்கள் நலனா?

ஒரு அரசு புதிய திட்டம் ஒன்றை அறிமுகப் படுத்தும்போது, அது மக்கள் நலன் மற்றும் சமூக முன்னேற்றம் சார்ந்த ஏதேனும் ஒரு தொலை நோக்குக் கொள்கையைக் கொண்டிருக்க வேண்டும்.

தமிழ்நாட்டின் திராவிட அரசுகள் கொண்டு வந்த ஒவ்வொரு திட்டமும் அத்தகைய குறுகிய கால அல்லது நீடித்த பயன்களைத் தரக்கூடிய தெளிவான நோக்கங்களையே வெளிப்படுத்தி வந்திருக்கின்றன. வறுமை ஒழிப்பு, கல்வி வளர்ச்சி, சுகாதார மேம்பாடு, இளைஞர் மற்றும் பெண்கள் முன்னேற்றம் போன்ற ஏதேனும் ஒரு நலன் சார்ந்த அடிப்படையிலேயே இலவசத் திட்டங்களோ சலுகைகளோ வழங்கப்பட்டு வந்திருக்கின்றன.

மேலும், அத்திட்டங்கள் தமிழ் மக்களின் நல னுக்காக உழைத்த தலைவர்களின் பெயர் களிலோ அல்லது 'முதல்வர்', 'அரசு' என்ற பொது அடையாளத்துடனோதான் நடைமுறைப்படுத் தப்பட்டு வந்திருக்கின்றனவே தவிர, எந்தத் தனிப்பட்ட உறவுமுறையாலும் அழைக்கப் பட்டது இல்லை.

'நான் உங்கள் அண்ணன், உங்கள் தம்பி, உங்கள் மாமன்' என விஜய் ஆடிவரும் செண்டி மெண்டல் நாடகங்களுக்காகவே ' தாய்மாமன் தங்க மோதிரம்' திட்டம் கொண்டுவரப்படுகிறதே தவிர, இதில் எந்தவொரு அறிவார்ந்த அடிப்படை யும் இல்லை.

முன்னோடித் திட்டங்களும் சமூக நோக்கமும்

பெண்கள் கல்வியை ஊக்குவிப்பதற்காகக் கலைஞர் கொண்டுவந்த 'மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம்', எட்டாம் வகுப்பு வரை படித்த ஏழைப் பெண்களுக்கு நிதியுதவியுடன் சேர்த்து முதலில் 4 கிராம் தங்கம் வழங்கும் திட்டமாக அறிவிக்கப் பட்டு, பின்னர் 8 கிராம் தங்கமாக உயர்த்தப்பட் டது.

தமிழ்நாடு அடைந்த கல்வி வளர்ச்சியின் காரணமாக, எட்டாம் வகுப்பு படிப்பு என்ற அளவு கோல் காலப்போக்கில் மாற்றமடைந்தது. பெண் கள் பெருமளவில் உயர் கல்வியை நோக்கிச் சென்ற நிலையை உணர்ந்து, வறிய குடும்பங்களைச் சேர்ந்த கல்லூரிக்குச் செல்லும் மாணவிகளுக்குக் கல்வி உதவித்தொகையாக மாதம் ரூ.1,000 வழங்கும் 'புதுமைப் பெண்' திட்டத்தை மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு கொண்டுவந்தது. பின்னர் அத்திட்டம் 'தமிழ்ப் புதல்வன்' என்ற பெயரில் மாண வர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

இல்லத்தரசிகளுக்குப் பொருளாதார சுதந் திரம் அளிக்க மாதம் ரூ. 1,000 வழங்கும் 'கலை ஞர் மகளிர் உரிமைத் தொகை', பெண்களின் சமூகப் பங்கேற்பை அதிகரிக்கும் 'விடியல் பயணப் பேருந்துத் திட்டம்', குழந்தைகளின் ஊட்டச்சத்துப் பற்றாக்குறையைப் போக்கும் 'முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்' என அனைத்துமே தெளிவான மக்கள் நலன் மற்றும் வளர்ச்சி சார்ந்த நோக்கங்களைக் கொண்டவை.

இலவச மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், உயிர் காக்கும் அவசர மருத்துவத் திட்டங்கள், பயிர்க் காப்பீட்டுத் திட்டங்கள், மாணவர்களுக்கான இலவச மடிக்கணினி மற்றும் மிதிவண்டித் திட்டங்கள் எனத் தமிழ்நாடு முன்னெடுத்த பல திட்டங்கள் இன்று இந்தியாவிற்கே முன்னோடி யாக விளங்குகின்றன. ஒரு சமூக நலத் திட்டம் என்பது உடனடி நிவாரணமாகவும், அதேவே ளையில் எதிர்காலத்திற்கான முதலீடாகவும் அமைய வேண்டும்.

கொரோனா காலச் சிறப்பு நிவாரணம்

இதற்குச் சிறந்த உதாரணமாகக் கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் பெற்றோர்களை இழந்த குழந்தைகளுக்காகத் திராவிட மாடல் அரசு கொண்டுவந்த திட்டங்களைக் குறிப்பிட லாம். "கொரோனாவால் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கான சிறப்பு நிவாரண உதவித் திட்டம்" என்ற விரிவான நிதி உதவித் திட்டம் அமல்படுத்தப்பட்டது:

- **ரூ. 5 லட்சம் வைப்புத்தொகை (Fixed Deposit):** பெற்றோர் இருவரையும் இழந்த அல்லது ஒற்றைப் பெற்றோரை இழந்து தவிக் கும் குழந்தைகளின் பெயரில் தலா ரூ.5 லட்சம் தமிழ்நாடு அரசு நிறுவனத்தில் வைப்புத்தொகை செய்யப்பட்டது. இத்தொகை வட்டியுடன் சேர்த்து, அக்குழந்தைக்கு 18 வயது நிறைவடையும்போது வழங்கப்படும்.
- **ரூ.3 லட்சம் உடனடி நிவாரணம்:** தாய் அல்லது தந்தையை இழந்து, ஒரு பெற்றோரு டன் வாழும் குழந்தைகளுக்கு உடனடி நிவார ணமாக அக்குடும்பத்திற்கு ரூ. 3 லட்சம் வழங்கப் பட்டது.
- **மாதாந்திர பராமரிப்புத் தொகை:** உறவினர் கள் அல்லது பாதுகாவலர்களின் ஆதரவில் வள ரும் குழந்தைகளுக்கு, அவர்களின் 18 வயது வரை பராமரிப்புச் செலவாக மாதம் ரூ. 3,000 வழங்கப்பட்டது.
- **இலவசக் கல்வியும் தங்குமிடமும்:** இக்குழந் தைகளின் கல்லூரிப் படிப்பு (Graduation) வரை யிலான கல்விச் செலவு மற்றும் விடுதிச் செலவு கள் அனைத்தையும் அரசே முழுமையாக ஏற்கும் என்று அறிவிக்கப்பட்டுச் செயல்படுத் தப்பட்டது.

அதேபோல, 2009இல் கலைஞர் ஆட்சிக்கா லத்தில் தமிழ் மொழியை ஊக்கப்படுத்தும் வகை யில், சென்னை மாநகராட்சி மகப்பேறு மருத்து வமனைகளில் பிறந்து, தூய தமிழில் பெயர் சூட்டப்படும் குழந்தைகளுக்கு மட்டும் 1 கிராம் தங்க மோதிரம் பரிசாக வழங்கும் திட்டம் அறிமு கப்படுத்தப்பட்டது. தமிழ் வளர்ச்சி என்ற தெளி வான பண்பாட்டு நோக்கம் அத்திட்டத்தின் பின் னணியில் இருந்தது.

'தாய்மாமன் தங்க மோதிரத் திட்டம்': கேள்விகளும் விமர்சனங்களும்

ஆனால், த.வெ.க. அரசு கொண்டுவந்திருக் கும் 'தாய்மாமன் தங்க மோதிரத் திட்டம்' மேலே குறிப்பிட்ட எந்தவொரு நலன் சார்ந்த நோக்கத் தையாவது நிறைவு செய்திருக்கிறதா அல்லது தகுந்த விதிமுறைகளையாவது பின்பற்றியிருக் கிறதா என்றால் இல்லை என்பதே உண்மை.

இத்திட்டம் பல காரணங்களுக்காக் கடுமை யான விமர்சனங்களை எதிர்கொண்டு வருகிறது:

1. அடிப்படை மருத்துவக் கட்டமைப்புப் புறக்கணிப்பு

அரசு மருத்துவமனைகளில் படுக்கை வசதி கள், அவசரச் சிகிச்சை உபகரணங்கள், போதிய மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் பற்றாக் குறை போன்ற அடிப்படைத் தேவைகள் இன் னும் முழுமையாக நிவர்த்தி செய்யப்படவில்லை. மருந்துத் தட்டுப்பாடு குறித்த விமர்சனங்களும் நிலவுகின்றன. இத்தகைய சூழலில், ஆண்டுக்கு ரூ.755.83 கோடி போன்ற பெரும் தொகை யைத் தங்கம் போன்ற அடையாளப் பரிசுகளுக் குச் செலவிடுவதை விட, கிராமப்புற மற்றும் அரசு மருத்துவமனைகளின் உள்கட்டமைப்பை மேம் படுத்தப் பயன்படுத்தியிருக்க லாம்.



மனுஷ்ய புத்திரன்
மாநில ஆலோசகர், தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி

2. கடன் சுமை மற்றும் அவசர நிதிப் பயன்பாடு

மாநில அரசு கடுமையான கடன் சுமையில் இருக்கும்போது, இதுபோன்ற கூடுதல் நிதிச் சுமையை ஏற்படுத்தும் திட்டங்கள் தேவையா என்ற கேள்வி எழுகிறது. மேலும், இத்திட்டத்தின் முதற்கட்டச் செயல்பாட்டிற்கு அவசரகால நிதி யைப் (Contingency Fund) பயன்படுத்தியது பெரும் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது. தமிழ் நாட்டில் ஏற்கனவே மகப்பேறு இறப்பு விகிதம் (MMR) மிகக் குறைவாக இருக்கும் சூழலில், அவசர நிதியைப் பயன்படுத்தி இத்திட்டத்தை உட னடியாக அமல்படுத்த வேண்டிய அவசியம் என்ன ?.

3. கொள்முதல் சார்ந்த சந்தேகங்கள்

மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்களை வாங்குவதற்காக உருவாக்கப்பட்ட தமிழ்நாடு மருத்துவச் சேவைக் கழகம் (TNMSC) மூலம் தங்க மோதிரங்களை வாங்குவதற்கான வழிகாட் டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளன. மருத்துவத் துறை சார்ந்த அமைப்பிடம் தங்கம் வாங்கும் பொறுப்பை ஒப்படைப்பது நிர்வாக ரீதியாக எந்த வகையில் நியாயம்?

4. ஆணாதிக்கச் சிந்தனையின் மறுஉருவாக்கம்

சமூக மற்றும் பாலின ஆய்வாளர்கள் இத்திட் டத்தை ஆணாதிக்கச் சிந்தனையின் தொடர்ச்சி யாகவே பார்க்கின்றனர். 'தாய்மாமன் சீர்' என்ற பெயரில் தங்கம் வழங்குவது, பெண்களை உரி மைகள் கொண்ட குடிமக்களாகப் பார்க்காமல், அரசு வழங்கும் தர்மத்தைப் பெறும் எளிய பொரு ளாகவும், 'தாய்' என்ற பாத்திரத்திற்கு மட்டுமே முக்கியத்துவம் அளிப்பதாகவும் அமைகிறது.

'தாய்மாமன்' மற்றும் 'சீர்' போன்ற சொல்லாடல் கள் பாரம்பரிய ஆணாதிக்கக் குடும்ப அமைப்பை அடிப்படையாகக் கொண்டவை. ஒரு பெண்ணுக் கும் அவளது குழந்தைக்கும் ஓர் ஆண்தான் (தாய் மாமன்) பாதுகாப்பு மற்றும் பொருளாதார ஆதரவு வழங்க வேண்டும் என்கிற பழமைவாதச் சிந்த னையை இத்திட்டம் மறுஉருவாக்கம் செய்கிறது.

பெண்கள் சுயசார்புடன் (Empowerment) வாழ் வதற்குப் பதிலாக, இதுபோன்ற 'சீர்' வழங்கும் திட்டங்கள் பெண்களை மீண்டும் குடும்ப ஆண் களின் தயவில் வாழும் பழைய நிலைக்குக் கொண்டு செல்ல வழிவகுக்கும் என நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி கடுமையாக விமர்சித்திருக்கிறார்.

5. தர்மம் vs உரிமை

நவீன நலன்புரி அரசுகள் பெண்களைத் தன் னாதிக்கமும் சம உரிமையும் கொண்ட குடிமக் களாகப் (Citizens) பார்க்க வேண்டும். அரசு 'தாய் மாமன்' என்ற பாத்திரத்தை ஏற்றுத் தங்கம் வழங்குவது, பெண்களை வெறும் 'தர்மம் பெறக் கூடியவர்களாக' (Objects of Charity) மாற்று வதாகப் பெண்ணியலாளர்கள் சாடுகின்றனர்.

6. ஊட்டச்சத்தும் ஆரோக்கியமும் புறக்கணிப்பு

பச்சிளங்குழந்தைகளுக்கும் தாய்மார்களுக் கும் தற்போதைய சூழலில் தேவைப்படுவது தங்கம் போன்ற ஆடம்பர அடையாளங்கள் அல்ல; மாறாக முறையான ஊட்டச்சத்து, தர மான தாய்ப்பால் மற்றும் மேம்பட்ட மகப்பேறு மருத்துவக் கட்டமைப்பே ஆகும்.

7. பொருளாதாரச் சவால்கள்

தங்கம் நிலையற்ற சந்தை மதிப்பு கொண்ட பொருள் என்பதால், எதிர்காலத்தில் பணவீக்கம் மற்றும் தங்கத்தின் விலை உயரும்போது, இத்திட் டத்தை அதே நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து தொய் வின்றி நடத்துவது அரசுக்குப் பெரும் சவாலாக மாறும் எனப் பொருளாதார வல்லுநர்கள் எச்சரிக் கின்றனர்.

8. பாரபட்சமான கட்டுப்பாடுகள்

தனியார் மருத்துவமனைகளில் பிறந்து, பின் னர் அவசரச் சிகிச்சைக்காக அரசு மருத்துவம னையின் பச்சிளங்குழந்தைகள் பிரிவில் (NICU) சேர்க்கப்படும் குழந்தைகளுக்கு இந்த மோதிரம் வழங்கப்பட மாட்டாது போன்ற கட்டுப்பாடுகள் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளன. பிரசவத்திற்கு அவசரமாகத் தனியார் மருத்துவமனைகளில் சேர்க்கப்படும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு இத்திட்டத்தை மறுப்பது அநீதி யாகும். சமூக நீதி சார்ந்த அளவுகோலோ, பொரு ளாதார அளவுகோலோ இன்றி, குழந்தை எங்கு பிறக்கிறது என்பதை மட்டும் அளவுகோலாகக் கொள்வது ஏற்புடையதல்ல.

9. பயனற்ற மதிப்பும் விற்பனை அபாயமும்

ஒரு கிராம் தங்கம் என்பது தற்போதைய பொருளாதாரச் சூழலில் ஒரு குழந்தையின் எதிர் காலத் தேவைகளுக்குப் பெரிய அளவில் உதவப் போவதில்லை. மேலும் வறுமையில் இருக்கும் குடும்பங்கள் அன்றாடத் தேவைகளுக்காகவோ கடன்களை அடைப்பதற்காகவோ இம்மோதி ரத்தை உடனடியாக விற்றுவிடவோ அடகு வைக்கவோ வாய்ப்புள்ளது.

10. திட்ட அமலாக்கத்தில் எழும் சந்தேகங்கள்

இத்திட்டத்திற்கான டெண்டர் நடைமுறையி லும் பல சந்தேகங்கள் எழுந்துள்ளன. தங்கத் தின் அடிப்படை விலையை அரசு சந்தை மதிப் பின்படி வழங்கிவிடும் நிலையில், மோதிரங் களைத் தயாரிப்பதற்கான செய்கூலி, பேக்கிங், போக்குவரத்து, காப்பீடு மற்றும் BIS ஹால்மார்க் முத்திரை ஆகிய கூடுதல் செலவினங்களுக்காக மட்டுமே டெண்டர் விடப்பட்டது.

அதில் பங்கேற்ற 'ஜாய் ஆலுக்காஸ்' (Joyalukkas) நிறுவனம், கூடுதல் கட்டணமாக வெறும் **"1 பைசா"** எனக் குறிப்பிட்டு மிகக் குறைந்த விலைப் புள்ளியைச் (Lowest Bidder) சமர்ப்பித்து ஒப்பந்தத்தைக் கைப்பற்றியது.

ஒரு மோதிரத்திற்கு BIS ஹால்மார்க் முத்திரை பெறவே ரூ.45 வரை கட்டணம் செலுத்த வேண்டியுள்ள நிலையில், பல லட்சம் மோதிரங் களை வெறும் 1 பைசா கூடுதல் செலவில் தயா ரித்து, மாநிலம் முழுதும் உள்ள 107 மையங்க ளுக்குக் கொண்டு சேர்ப்பது வணிக ரீதியாக எவ்வாறு சாத்தியம்? இதனால் நகைகளின் தரம் மற்றும் எடையில் முறைகேடுகள் நடக்க வாய்ப் புள்ளதாக விமர்சனங்கள் எழுகின்றன.

மேலும், அரசு மருத்துவமனைகளின் பிரசவ வார்டுகளிலேயே லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள தங்க மோதிரங்களைப் பாதுகாப்பாக லாக்கர்களில் வைப்பதும் விநியோகிப்பதும் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களின் பணிச் சுமையை அதிகரிக்கும். மருத்துவமனையின் முதன்மைச் சேவையான 'சிகிச்சை அளிப்பதை' இது திசைதிருப்பும் என்பதால், மோதிரங்களை நேரடியாக வழங்குவதற்குப் பதிலாக வங்கிக் கணக்கில் தொகையாகச் சேர்க்கலாம் என்ற கருத்துகளும் முன்வைக்கப்படுகின்றன.

சென்னை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் ஆவின் பால் விநியோகத்தில் தட்டுப்பாடுகளும் விலையேற்றமும் இருக்கும் சூழலில், குழந்தை களுக்கு தடையற்ற பால் விநியோகத்தை உறுதி செய்யாமல், பச்சிளங்குழந்தைகளுக்குத் தங்கம் வழங்கும் ஆடம்பர அரசியலை இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது. அடிப்படை மக்கள் தேவை களைப் புறந்தள்ளிவிட்டுச் செய்யப்படும் இது போன்ற விளம்பரத் திட்டங்கள், மக்கள் நலனுக் கான உண்மையான திட்டங்களாக உருவெடுக்க முடியாது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மிசா கே. பரசுராமன்
செப்டம்பர் 30 (1992)



கடலோர மீனவர் கிராமங்களில் கழகம் வளர பாடுபட்டவர்.

திருவொற்றியூர் நகர அவைத்தலைவர் பொறுப்பு வகித்தவர்.

மூன்று முறை திருவொற்றியூர் நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் "மீசைக்காரர்" என்று அழைக்கப்பட்டவர்.

நெருக்கடிகால மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டவர் கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

தட்டாஞ்சாவடி வேட்பாளர் கு.சேதுசெல்வத்தை ஆதரித்து

க.பொன்முடி வாக்கு சேகரித்தார்!

இரா.சிவா– எ.எம்.எச்.நாசிம் – பொன்.கௌதம்சிகாமணி பங்கேற்பு!

புதுச்சேரி, செப். 30- கழகத் தலைவர் தளபதியார் அவர்கள் மற்றும் கழக இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் ஆதரவு பெற்ற புதுச்சேரி மாநிலம், தட்டாஞ்சாவடி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் கு.சேது (எ) சேது செல்வம் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்திற்கு விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க.விற்கு ஒதுக்கப்பட்டுள்ள பூத் எண் 30 பாக்கமுடையான்பேட்டை மெயின் ரோடு (பொய்யாக் குளம்) பகுதிகளில் கழக துணைப் பொதுச்செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி தலைமையிலும் புதுச்சேரி மாநில கழக அமைப்பாளர் இரா. சிவா மற்றும் புதுச்சேரி சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எ.எம்.எச். நாசிம், விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி ஆகியோர் முன்னிலையில் வீதி, வீதியாக வாக்குகளை சேகரித்தார்கள். உடன் மாவட்ட துணைச் செயலாளர் டி.என்.முருகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் செல்வராஜ், ஒன்றியச் செயலாளர்கள் மு.தங்கம், ஜி.ரவிச்சந்திரன், எஸ். லூயிஸ், பி.வி.ஆர்.சு. விசுவநாதன், கு.தீனதயாளன், பேரூராட்சி செயலாளர் பூக்கடை கணேசன், ஒன்றிய குழுத் தலைவர் ஓம்சிவசக்திவேல், மாவட்டக் கவுன்சிலர் ராஜீவ்காந்தி, ஒன்றிய செயலாளர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் கலந்துக் கொண்டார்கள்.

ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டக் கழகப் பொருளாளர்

பி.என்.சுப்பிரமணியன் நினைவு நாள்!

ஆற்காடு, செப். 30- ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டக் கழகப் பொருளாளர் பி.என்.சுப்பிரமணியன் அவர்களின் 11-ம் ஆண்டு நினைவு நாள் நாளை (1.10.2026) அவரது இல்லத்தில் நடை பெறுகிறது.

மறைந்த பி.என்.சுப்பிர மணியன் அவர்கள் ஆற்காடு நகரக் கழகச் செயலாளராக 25 ஆண்டுகள் பணியாற்றி யவர்.

தி.மு.கழக தணிக்குழு உறுப்பினராகவும் சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்



றியதோடு ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டக் கழக பொருளாளராகவும் இருந்து முத்தமிழறிஞர் கலைஞர், இனமானப் பேராசிரியர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின், பொதுச் செயலாளர் துரைமுருகன் மற்றும் முன்னாள் கழகப் பொருளாளர் ஆற்காடு வீராசாமி உள்ளிட்டோருடன் நெருங்கிய பணியாற்றியவர் பி.என்.சுப்பிரமணியன் அவர்கள்.

ஆற்காடு நகர அவைத் தலைவர் பி.என்.எஸ்.இராஜசேகரன், மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர் பி.என்.எஸ்.சரவணன் ஆகிய இரு மகன்கள் அவருக்கு உள்ளனர்.

நினைவு நாளையொட்டி நல உதவிகள் நிகழ்ச்சி நடை பெறுகிறது.



மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் நேற்று 29.09.2026 கழகத்தின் வேட்பாளர் வழக்கறிஞர் இ.பரந்தாமனை ஆதரித்து, வேலூர் வடக்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள அச்சரப்பாக்கம் வடக்கு ஒன்றியம் – மொறப்பாக்கம் ஊராட்சியில் 100 நாள் வேலைத் திட்டத்தில் பணிபுரியும் பெண்களை வேலூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த் சந்தித்து, ஆட்சியின் அவல நிலை எடுத்துரைத்து கழக வேட்பாளருக்கு ஆதரவாக வாக்குகள் சேகரித்தார். உடன் ஒன்றியக் கழக, பகுதிக் கழகச் செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.